செய்தி வெளியீடு எண் : 04 நாள் :02.05.2018

**தேனி மாவட்டம்,**
**விவசாயிகள் நல்வாழ்வு பணிமனை (கிசான் கல்யாண் காரியசாலா) கருத்தரங்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது:-**

*****

தேனி மாவட்டம், வடுகபட்டி பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில், கிராம் ஸ்வராஜ் அபியான் திட்டத்தின் கீழ் விவசாயிகள் நல்வாழ்வு பணிமனை (கிசான் கல்யாண் காரியசாலா) கருத்தரங்கு இன்று (02.05.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கருத்திரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும் போது தெரிவிக்கையில், கிராம் ஸ்வராஜ் அபியான் திட்டத்தின் கீழ் விவசாயிகள் நல்வாழ்வு பணிமனை (கிசான் கல்யாண் காரியசாலா) திட்டத்தின் நோக்கம் ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள விவசாயிகளை கருத்தரங்கிற்கு வரவழைத்து அவர்களுக்கு துறை சார்ந்த அனைத்து வேளாண் திட்டங்கள் மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டு, கருத்தரங்கில் கலந்து கொண்ட விவசாயிகளின் மூலம் பிற விவசாயிகளை பயனடையச் செய்வதே ஆகும்.

மாவட்டத்தில் கடந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தியில் 1.82 இலட்சம் மெட்ரிக் டன் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, இதுவரை 1.71 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு, கூடுதலாக 15000 மெட்ரிக் டன் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. உயரிய தொழில் நுட்பங்களைக் கடைபிடித்து கூடுதல் மகசூல் பெற்றிட தேசிய உணவு பாதுகாப்புத்திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம், விதை கிராமத்திட்டம், எண்ணெய் பனைத்திட்டம் மற்றும் பருத்தி சாகுபடித்திட்டங்களின் மூலம் அரசின் மானியங்களை பெற்று பயனடையலாம்.

வேளாண்மைத்துறையின் மூலம் உழவன் செயலி (Uzhavan APP) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் விவசாயிகள் அரசின் மானியத்திட்டங்கள், இடுபொருட்கள் முன்பதிவு, பயிர் காப்பீட்டு விபரம், வட்டார அளவில் விதைகள் மற்றும் உரங்களின் இருப்பு விபரம், வேளாண் இயந்திரம் வாடகை மையங்களின் விபரம், விவசாயிகள் தாங்கள் விளைவித்த விளைபொருட்களின் சந்தை விலை நிலவரம் பற்றி எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

மாவட்டத்தில் பிரதான பயிராக நெல், மக்காச்சோளம், கரும்பு, மா, வாழை போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் நெல் நடவு பணியை தவிர்த்து விட்டு நேரடியாக நெல் விதைப்பு செய்து நல்ல மகசூல் பெறலாம். எண்ணெய்ப்பனைத் திட்டத்தில் ஒரு ஹெக்டர் நடவு செய்வதற்கு கன்று நடவு ஊடுபயிர், கருவிகள், ஆழ்துளை கிணறு அமைத்தல், மோட்டார் வழங்குதல் உட்பட மானியம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, நீர் ஆதாரம் உள்ள இடங்களில் பணப்பயிரான எண்ணெய்ப்பனை சாகுபடியினை விவசாயிகள் மேற்கொண்டு பயனடையலாம். கூட்டுப்பண்ணையத்திட்டத்தின் கீழ் உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு, டிராக்டர் மற்றும் இதர வேளாண் கருவிகள் குழுவினால் வாங்கப்பட்டுள்ளது. இக்கருவிகளை குழு உறுப்பினருக்கு குறைந்த வாடகைக்கு விடுவதோடு இதர விவசாயிகளுக்கும் வெளி வாடகைக்கு விட்டு குழுவிற்கு வருமானம் ஈட்டப்படுவதுடன், குழு உறுப்பினர்களின் விளைபொருட்களை ஒருங்கிணைத்து இடைத்தரகர்கள் இன்றி விற்பனை செய்து அதிக இலாபம் ஈட்டிட முடியும்.

நெல் கொள்முதலில் இடைத்தரகர்களின் செயல்பாட்டினால் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பினைத் தவிர்த்திட பெரியகுளம் வட்டாரத்தில் மேல்மங்கலம் கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டு 837 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது. பசுமைக்குடில் அமைத்து காய்கறிகள் நடவு செய்வதால் மும்மடங்கு அதிகமான மகசூலும் மற்றும் தரமான விளைபொருட்களும் கிடைப்பதால் விவசாயிகள் அதிக வருவாய்யை ஈட்டிடலாம். கோ கோ செடிகளில் இருந்து கிடைக்கும் அதிகப்படியான இலை மக்குகள் தென்னை மரத்திற்கும், நிலத்திற்கும் நல்ல உரமாக பயன்படுகிறது.

விளைபொருட்களை சந்தையில் கூடுதல் விலை நிலவும் போது விற்க ஏதுவாக சூரிய கூடார உலர்த்தி (Solar Drier) மூலம் உலர வைத்து பக்குவப்படுத்திட விவசாயிகளுக்கு சூரிய கூடார உலர்த்திகளை 50% மானியத்தில் அமைத்து வழங்கப்பட்டு வருகிறது. உலர்த்திகளின் மூலம் தேங்காய், முருங்கைஇலை, கருவேப்பிலை, ஓமம், மூலிகைப்பயிர்கள், வாழை மற்றும் மா போன்ற கனி வகைகளை உலர வைத்து பக்குவப்படுத்தி கூடுதல் விலைக்கு விற்க இயலும். இதன் மூலம் விவசாயிகளுக்கு 50% முதல் 100% வரை கூடுதல் இலாபம் ஈட்ட முடிகின்றது. ஆதி திராவிட விவசாயிகளுக்கு 50%மும் இதர விவசாயிகளுக்கு 40% அளவிலும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

நிலவி வரும் பண்ணை சக்தி குறைபாட்டினை ஈடுகட்டும் விதமாக அந்தந்த பகுதிகளில் நிலவும் பிரதான பயிர்களுக்கேற்ற இயந்திரங்களின் தொகுப்பு ரூ25,00,000 மதிப்புள்ளவற்றிற்கு ரூ10,00,000 அளவில் மானியமாக வழங்கப்பட்டு வேளாண் இயந்திரங்கள் சேவை மையம் நிறுவப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்து அதிக இலாபம் ஈட்டிடலாம். இதில் வேளாண் / தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி தவிர பால் மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் தேனீ வளர்ப்பு போன்றவற்றால் வருமானம் ஈட்டிடலாம்.

ஒவ்வொரு பிரதி வாரம் புதன் கிழமைகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், அனைத்துத்துறை அலுவலர்களுடன் வட்டார அளவில் விவசாயிகளை சந்திக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி 09.05.2018 உத்தமபாளையம், 16.05.2018 போடிநாயக்கனூர், 23.05.2018 கடமலைக்குண்டு, 30.05.2018 பெரியகுளம், 06.06.2018 சின்னமனூர், 13.06.2018 கம்பம், 20.06.2018 ஆண்டிபட்டி, 27.06.2018 தேனி ஆகிய வட்டாரங்களிலும், மாதாந்தோறும் மாவட்ட ஆட்சியர் அலவலகத்தில் நடைபெறும் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்திலும், விவசாயிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை நேரடியாக சந்தித்து குறைகளை தெரிவிக்கலாம். மேலும், வாரந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு வட்டார அலுவலகத்திலும் சம்பந்தப்பட்ட வேளாண் அலுவலர்களிடம் விவசாயிகள் தங்களது குறைகளை தெரிவித்து பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விவசாயிகளிடம் கலந்துரையாடி, வேளாண்மைத்துறையின் சார்பில் வேளாண் இடுபொருட்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.5,840/- மதிப்பிலான வேளாண் இடுபொருட்களையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் தலா ரூ.6,400/- வீதம் 3 பயனாளிகளுக்கு ரூ19,200/- மதிப்பிலான சூரிய விளக்கு இனக்கவர்ச்சி, மஞ்சள் வண்ண ஒட்டும் பொறிகளையும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 1 பயனாளிக்கு சோலார் பம்பு வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.2,91,600/- மதிப்பிலான சோலார் பம்பிற்கான மானியத்தொகையினையும் என மொத்தம் 9 பயனாளிகளுக்கு ரூ.3,16,640/- மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கருத்தரங்கில், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.சே.முகம்மது அப்துல் நசீர் அவர்கள், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.வெ.விஜயகுமாரன் அவர்கள், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.கா.கிஷோர்குமார் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சந்திரசேகரன் அவர்கள், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.எஸ்.ராஜேந்திரன் அவர்கள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை துணை இயக்குநர் திரு.த.டே.சத்தியராய் அவர்கள், தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய இணை பேராசியர் முனைவர் வா.சத்தியமூர்த்தி அவர்கள், தேனி விற்பனைக்குழு செயலாளர் திரு.என்.ஜெ.பால்ராஜ் அவர்கள், வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் திரு.வி.எஸ்.சங்கர் அவர்கள், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**